**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.97/2009**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமசந்திரன் | மதம் | : இந்து |
| த/பெ | : கோவிந்தன் நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 70 | கிராமம் | : வீரராகவபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**25.02.2026**
**பி.வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பிரமாண வாக்குமூலத்தை யார் சொல்லி தயார் செய்தது என்றால் நான்தான் சொன்னேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் யாருக்காக இந்த வழக்கில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் என் மனைவி தனம்மாளுக்காக வந்துள்ளேன். அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவருக்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் இல்லை. இந்த வழக்கில் என்ன என்ன புல எண்கள் குறிப்பிட்டுள்ளார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியும். புல எண்.187, 188 ஆகும். புல எண்.187 கிணறு ஆகும். வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு சொந்தமானது என்றால் ரவிகுமாரின் அப்பா சல்லா கிருஷ்ணமூர்த்திக்கு சொந்தமானதாகும். நான் சொன்ன இரண்டு புல எண்களுக்கும் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் என் மனைவி பெயரில் உள்ளது. வழக்கு சொத்திற்கு வரி யார் செலுத்தி வருகிறார்கள் என்றால் என் மனைவிதான் செலுத்தி வருகிறார்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)